# What do I need to know if my child is expelled?

## Parent/carer information

# என் குழந்தை வெளியேற்றப்பட்டால் நான் தெரிந்து கொள்ள வேண்டியவை என்ன?

## பெற்றோர்/பராமரிப்பாளர் தகவல்

### 'வெளியேற்றம்' என்றால் என்ன?

பாடசாலையை விட்டுக் கட்டாயமாக விலகியாகவேண்டும் என்றும், பாடசாலைக்குத் திருபிவரக் கூடாது என்றும் மாணவ-மாணவி ஒருவருக்குப் பாடசாலை அதிபரும், 'பணிப்பாளர், கல்வித் தலைமை' (Director, Educational Leadership) அவர்களும் சொல்வது 'வெளியேற்றம்' எனப்படும். 'வெளியேற்றம்' என்பது பாரதூரமானதொரு விடயம். பாடசாலையை விட்டு வெளியேற்றுவதற்கான முடிவு ஒன்றை எடுப்பதற்கு முன்பாக உங்களுடைய பிள்ளைக்கு ஆதரவுதவி அளிப்பதற்கான அனைத்து முயற்சிகளும் செய்யப்பட வேண்டும்.

இரண்டு காரணங்களுக்காக பாடசாலை அதிபர்கள் மாணவ-மாணவியரை வெளியேற்ற இயலும்:

- பாரதூரமான கவலைக்-கரிசனங்களை ஏற்படுத்தும் விதத்திலான நடத்தைகளை மாணவ-மாணவியர் கொண்டிருத்தல், மற்றும் அவர்களுடைய நடத்தைகளைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் பயனளிக்காமை.
- 17 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய மாணவ-மாணவியர்களாக இருந்து, கல்விச் செயற்பாடுகளில் பங்குபற்றாமை

உங்களுடைய பிள்ளையை வெளியேற்றுவதற்கான முடிவை மேற்கொள்வதற்கு முன்பாக, உங்களுடைய பிள்ளையின் தேவைகள், மற்றும் பின்புலம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு உங்களுடைய பிள்ளையின் கல்விக்குப் பாடசாலை எவ்வாறு ஆதரவுதவியாக இருந்துள்ளது என்பதைப் பாடசாலை அதிபர்கள் கருத்தில் கொள்வர்.

வெளியேற்றம் செய்யப்படுவதற்கு முன்பாக, உங்களுடைய பிள்ளையை வெளியேற்றம் செய்வது குறித்து பாடசாலை அதிபர் யோசித்துக்கொண்டிருக்கிறார் என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதற்காக அதிபர் உங்களை தொடர்புகொள்வார். சாத்தியப்படவல்ல வெளியேற்றம் குறித்த எழுத்து மூலமான அறிவிப்பு ஒன்றைப் பாடசாலை அதிபர் வழங்குவார், மற்றும் அதற்கான காரணங்களை முன் வைப்பதற்காகவும், உங்களுடைய பிள்ளையை அவர் வெளியேற்றினால் என்ன நடக்கும் என்பதைப் பற்றிப் பேசவும் அவர் உங்களை அழைப்பார். ஆதரவுதவி நபர் ஒருவரை இந்த சந்திப்பிற்கு நீங்கள் உடன் அழைத்துவரலாம். இந்த ஆதரவுதவி நபரானவர் உங்களுக்கு/உங்களுடைய பிள்ளைக்கு உணர்வு ரீதியான, அல்லது நடைமுறை ரீதியான ஆதரவுதவியை அளிக்கலாம்.

எழுத்து மூலமான அறிவிப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து, உங்களுடைய பிள்ளையை ஏன் வெளியேற்றக் கூடாது என்பதற்கான காரணங்களைக் காண்பிக்கும் மறுமொழி ஒன்றை பாடசாலைக்கு அளிப்பதற்கு உங்களுக்கு ஏழு நாட்கள் இருக்கும். முடிவை மேற்கொள்ளும் செயல்பாட்டு முறையின் ஒரு பகுதியாக பாடசாலை அதிபர் இந்த மறுமொழியைப் பயன்படுத்துவார்.

### என்னுடைய பிள்ளை வெளியேற்றப்பட்டுவிட்டால் என்ன ஆகும்?

மாணவ-மாணவி ஒருவர் வெளியேற்றப்படலாமா என்பதைப் பாடசாலை அதிபரும், 'பணிப்பாளர், கல்வித் தலைமை' அவர்களும் கூட்டாக முடிவு செய்வர். மாணவ-மாணவி ஒருவரை வெளியேற்றுவதற்கான முடிவை மேற்கொண்டதிலிருந்து 24 மணி நேரத்திற்குள்ளாகப் பாடசாலை அதிபர் மாணவ-மாணவிக்கும், அவரது பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளருக்கும் இதைத் தெரிவித்தாக வேண்டும், அத்துடன் 'NSW கல்வித் திணைக்கள'த்திற்கு இதைக் கட்டாயமாக அவர் அறியத்தர வேண்டும்.

உங்களுடைய பிள்ளை 17 வயதிற்குக் கீழ்ப்பட்டவராக இருந்து, அவரது நடத்தையின் காரணமாக அவர் வெளியேற்றப்பட்டிருந்தால், அவர் கல்வியைத் தொடர்வதற்காகப் புதிய பாடசாலை ஒன்றை அல்லது மாற்றுச் சூழல் ஒன்றை 15 பாடசாலை நாட்களுக்குள்ளாகப் பாடசாலை அதிபர் கண்டறிந்தாகவேண்டும்.

உங்களுடைய பிள்ளை 17 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராக இருந்தால், அவர் தொடர்ந்து படிப்பதற்கான, அல்லது வேலைக்கு மாறுவதற்கான தெரிவுகள் என்ன என்பதை நீங்களும் உங்களுடைய பிள்ளையும் தேடவேண்டும்.

### பாடசாலையிடமிருந்து என்ன தகவல்களைப் பெற முடியும்?

என்ன நடந்தது, ஏன் நடந்தது என்பது பற்றிய கூடுதல் தகவல்களை நீங்கள் பாடசாலையிடம் கேட்கலாம். எந்தவொரு முடிவுகளின் பின்னணியில் உள்ள காரணத்தையும், என்ன நடவடிக்கைகள் நடக்கும் மற்றும் உங்களுக்கு ஏதேனும் சிக்கல் இருந்தால் என்ன செய்ய வேண்டும் என்பதை பாடசாலை உங்களுக்கு விளக்க வேண்டும்.

### வெளியேற்றம் ஒன்றிற்கு எதிராக நான் மேல் முறையீடு செய்யலாமா?

ஆம், பாடசாலை அதிபரும், 'பணிப்பாளர், கல்வித் தலைமை'-யும் நியாயமற்ற முடிவு ஒன்றை மேற்கொண்டுள்ளனர், அல்லது அவர்கள் சரியான விதிமுறைகளைப் பின்பற்றவில்லை என்று நீங்கள் நம்பினால் நீங்கள் மேல் முறையீடு செய்யலாம். 'மேல் முறையீட்டு மூலவள'த்தினைப் பாருங்கள்.

'உங்களுடைய பிள்ளைக்கான பரிந்துரைப்பு'- ஐப் பற்றிய தகவல்களுடன் பாடசாலைகளுடன் தொடர்பாடல் கொள்வதற்கான வழிகளை விவரிக்கும் 'பாடசாலை சமூக சாசனம்' - ஐப் பற்றிய தகவல்களும் கிடைக்கும்.

### முறைப்பாடு ஒன்றை நான் எவ்வாறு செய்வது?

வெளியேற்றம், மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் அல்லது அளிக்கப்பட்ட ஆதரவுதவிகள் ஆகியவற்றைப் பற்றிய கரிசனக்-கவலைகள் உங்களுக்கு இருந்தால் 'முறைப்பாடு ஒன்றைச் செய்தல்' - ஐப் பற்றிய மேலதிகத் தகவல்களைக் காண தயவுசெய்து வலைத்தலத்தினைப் பாருங்கள்.

### தொலைபேசி உரைபெயர்ப்பாளர் சேவை

நீங்கள் பாடசாலையுடன் தொடர்புகொள்ள விரும்பி, ஆங்கில மொழியில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், தொலைபேசி உரைபெயர்ப்பாளர் சேவையை 131 450-இல் அழைத்து உங்களுக்கு என்ன மொழி தேவை என்பதைச் சொல்லி, பாடசாலையை அழைக்குமறு தொலைபேசி இயக்குநரைக் கேளுங்கள். உங்களுடைய உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக உரைபெயர்ப்பாளர் ஒருவரைத் தொலைபேசி இயக்குநர் இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.